www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15X1=15

1. பொருந்தாத இணை எது?
(அ) ஏறுகோள் – எருதுகட்டி (ஆ) திருவாரூர் – கரிக்கையூர்
(இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு (ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

2. மல்லல் மூதூர் உயவேற்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
(அ) மறுமை (ஆ) பூவரசு மரம் (இ) வளம் (ஈ) பெரிய

3. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
(அ) -------- இனம் (ஆ) வண்ணம் -------
(இ) ------- குணம் (ஈ) வனப்பு ------
அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று
இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று

4. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே – இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது.
(அ) நுகர்தல் (ஆ) தொடு உணர்வு (இ) கேட்டல் (ஈ) காணல்

5. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
(அ) கர்நாடகம் (ஆ) கேரளா (இ) இலங்கை (ஈ) ஆந்திரா

6. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
(அ) திசைச்சொற்கள் (ஆ) வடசொற்கள் (இ) உரிச்சொற்கள் (ஈ) தொகைச்சொற்கள்

7. இந்தியா நாடு 'மொழிகளின் காட்சிசாலையாகத் திகழ்கிறது' எனக் குறிப்பிட்டவர்.
(அ) ச. அகத்தியலிங்கம் (ஆ) குமரிலபட்டர் (இ) கால்டுவெல் (ஈ) ஹோக்கன்

8. எழுத்தாணி கொண்டு --------ய தமிழை,
ஏவுகணையில் ------- எல்லாக் கோள்களிலும் ஏற்றுங்கள். விடுபட்ட இடங்களுக்குப் பொருந்தும் ஒரு சொல்லைத் தேர்ந்தெடுக்க.
அ) விலங்கு ஆ) அகல் இ) அலை ஈ) எழுதி

9. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசிய திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

10. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக --------.
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் --------.
அ) வந்தான், வருகிறான் (ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

11. அந்தாதிச் சொல்லைத் தேர்க.
அழகு, குருவி, ..............
அ) இனிப்பு ஆ) விருது இ) புன்னகை ஈ) புதுமை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (12,13,14,15)

*"மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு*
*பூவி ரித்த புதுமதுப் பொங்கிட*
*வாவி யிற்பொலி நாடு வளந்தரக்*
*காவி ரிப்பினல் கால்பரந் தோங்குமால்"*

12. இப்பாடலின் ஆசிரியர்?

(அ) சேக்கிழார் ஆ) குடபுலவியனார் இ) தொல்காப்பியர் ஈ) வைரமுத்து

13. இப்பாடலடிகள் இடம்பெற்ற நூலைத் தேர்க.

அ) புறநானூறு ஆ) பெரியபுராணம் இ) தமிழோவியம் ஈ) தமிழ்விடு தூது

14. எதுகைச் சொற்களைத் தேர்க.

(அ) வாவி – நாடு (ஆ) காவி – கால்பரந் (இ) வாவி – வளந்தரக் (ஈ) வாவி – காவி

15. வாவி – பொருள் தருக.

அ) பொய்கை ஆ) தேன் இ) வண்டு ஈ) சங்கு

பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?
17. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
18. விடைக்கு ஏற்ற வினாவை எழுதுக.

அ) முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்
ஆ) ஜீன் 5ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

19. ஏறுதழுதவுல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
20. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
21. 'எனைத்தானும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5X2=10

22. **தொடரைப் பழமொழிகளைக் கொண்டு நிறைவு செய்க.**

அ) இளமையில் கல்வி ---------
ஆ) கற்றோர்க்குச் சென்ற --------

23. **வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.**
24. **பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.**

மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்.

25. வல்லினம் மிகும் இடங்கள் இரண்டினை எழுதுக.
26. **மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

அ) மேடும் பள்ளமும் ஆ) கண்ணும் கருத்தும்

27. **கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.**

அ) பார் ஆ) இரு

28. **கலைச்சொல் தருக.**

அ) Download ஆ) Missile

<u>குறிப்பு:</u> **28. செவிமாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா சொல்லுக்குள் சொல் தேடுக.**

அ) தமிழ்விடுதூது ஆ) எட்டுக்கால்பூச்சி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்புயல்புகளை விளக்குக.

30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

நீரின்று அமையாது உலகம் என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர். நீரே மனித வாழ்வின் அடிப்படை என்பதால், நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர்நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர். மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

1. மனித வாழ்வின் அடிப்படை எது?
2. நீரின்றி அமையாது உலகம் என்னும் கருத்தைக் கூறியவர் யார்?
3. நம் முன்னோர்கள் எவ்வாறு நீரைப் பாதுகாத்தனர்?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2X3=6

**34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34. அடி மாறாமல் எழுதுக.

அ) 'காடெல்லாம் கழைக்கரும்பு' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

(அல்லது)

ஆ) 'அறிவியல் என்னும் ------ எனத் தொடங்கி ------ ஏற்றுங்கள்' என முடியும் ஓ, என் சமகாலத் தோழர்களே! பாடல்.

பிரிவு – 3 (மதிப்பெண்கள்:6)

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2X3=6

35. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. வல்லினம் இட்டும், நீக்கியும், எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37. கூட்டு வினைகளின் வகைகளை எழுதி, எடுத்துக்காட்டு தருக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினை எழுதுக.

(அல்லது)

ஆ) 'விமான நிலையத்தில் நான்' – கற்பனையாகக் கதை ஒன்றினை எழுதுக.

39. அ) பள்ளியில் நடைப்பெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40. **காட்சியைக் கண்டு கவினுற ஐந்து தொடர்களில் எழுதுக.**





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

41. கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிரப்புக.

42. அ) நீங்கள் பாராட்டு பெற்ற சூழல்கள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

1. Linguistics - ----------
2. Literature - ---------
3. Philologist - ----------
4. Polyglot - ----------
5. Phonologist - ----------

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள். இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல். இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தெய்வ நூல், தமிழ்மறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை. இந்நூல இயற்றிய திருவள்ளுவருக்கு நாயனார், முதற்பாவலர், தெய்வப்பாவலர், செந்நாப்போதார் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

வினாக்கள்:

1. திருக்குறளின் வேறுபெயர்களை எழுதுக.
2. 'திருக்குறள் உலகப் பொதுமறை' எனப் போற்றப்பட காரணம் என்ன?
3. திருவள்ளுவ மாலை எந்நூலைப் போற்றுகிறது?
4. திருவள்ளுவரின் வேறு பெயர்கள் யாவை?
5. உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

அ) குறிப்புகள்: முன்னுரை – தமிழர் பண்பாடு – உழவுத் தொழில் – விழாக்கள் – விருந்தினர் போற்றுதல் – முடிவுரை.

(அல்லது)

ஆ) 'மழைநீர் சேகரிப்பு' என்னும் தலைப்பில் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுக.

குறிப்புகள்: முன்னுரை – வானின் கொடை மழை – மழையே வளத்தின் ஆதாரம் – மழைநீரைச் சேகரிப்போம் – முடிவுரை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com